*கவனிக்க .- 2014.09.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1881 - 2014 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2014.09.19

*1881 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1072 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1075 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** காணி பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள் சட்டமூலம், 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## திருத்தம்

### மேல் மாகாண மாகாண சபையின் அரச சேவை வெற்றிடங்கள்

சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை

1877 ஆம் இலக்க 2014, ஒகத்து 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் திருத்தப்படுகின்றது.

திருத்தத்திற்குள்ளாகும் பிரிவு :

| இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 01. | சாரதிகள் (II அ வகுப்பு) | இல்லை | (சாரதிகள் II அ வகுப்பில் நிலவிய வெற்றிடம் 2014.09.01 ஆந் திகதி இடமாற்றம் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.) |
| 02. | கனரக வாகன இயக்குநர்கள் (II ஆம் தரம்) | 01 | (பதவிகள் 3 ஆக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அப்பதவி 1 ஆக திருத்தப்படல் வேண்டும்.) |

எம். எச். டீ சசிகா தேவபிரிய,
செயலாளர்,
சீதாவக்கபுர நகர சபை,
அவிஸ்ஸாவெல்ல.

9-633

---

### தம்புள்ள மாநகர சபை

தம்புள்ள மாநகர சபையில் தற்போது நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியான, தம்புள்ள மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் வசிப்பவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தவர்கள் கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பத்தை தயாரித்து அதை பூர்த்தி செய்து "மாநகர ஆணையாளர், மாநகர சபை, தம்புள்ள" என்ற முகவரிக்கு 2014.09.26 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வீதித் தொழிலாளர் | 29 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) அல்லது தே. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் அல்லது சிங்களம் மொழியில் சித்தியுடன் குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளர் | 28 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | குறைந்தபட்சம் 8 ஆம் தரம் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 3 | வாகன ஓட்டுநர் | 3 | ரூபா 12,470-10×130-10×145-10×160 - 12×170- ரூபா 18,860 2006 (06/2006 (iv) இன் படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உள்ளடங்களாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் முதல் தடவையில் ஐந்து பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | அலுவலக வேலை உதவியாளர் | 1 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) அல்லது தே. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் அல்லது சிங்களம் மொழியுடன் குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 5 | தகனசாலை இயந்திர இயக்குநர் உதவியாளர் | 1 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160- ரூபா 17,600 (06/2006 (iv) இன்படி PL1-2006A) | க. பொ. த. (சா. த.) அல்லது தே. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் அல்லது சிங்களம் மொழியுடன்குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

3. **மேலதிக தகைமைகள்**.- (i) குறித்த பதவிகளில் கொண்டுள்ள முன்னனுபவம் விஷேடமாக கவனத்தில் கொள்ளப்படும்.

4. **ஆட்சேர்ப்பு முறை**.- (i) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

5. **சேவைகளுக்கான நிபந்தனைகள்** :

(i) இது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் மூன்று வருட கால தகுதிகாண் கால அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தகுதிகாண் காலத்தினுள் பணிக்கு சமுகமளித்தல் மற்றும் நன்னடத்தை போன்றன திருப்திகரமானதாக இருப்பின் நன்னடத்தை காலம் முடிவுறும்போது பணி நிரந்தரமாக்கப்படும்.

6. **வேறு பொதுவான நிபந்தனைகள்** :

(i) விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருத்தமற்றதாகும்).

(ii) விண்ணப்பதாரிகள் வம்சாவழி மூலம் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(iii) சிறந்த குண நலன்களுடன், தெளிவான மனநிலையிலிருத்தல் வேண்டும் ;

(iv) நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ, அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது ;

(v) தம்புள்ள மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் 3 வருடங்கள் வதிவதை கிராம அலுவலரால் வழங்கப்பட்டு, பிரதேச செயலாளர் மூலமும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 தாளில் மட்டும் பூரணப்படுத்தி 2014.09.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மாநகர ஆணையாளர், மாநகர சபை, தம்புள்ள" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.)

8. விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புவதுடன், நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும்:-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ். (கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) ;
(iv) குணநலச் சான்றிதழ்கள் 2. (ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெறப்படல் வேண்டும்) ;
(v) தொழில் சம்பந்தமான சான்றிதழ்கள் இருப்பின்;
(vi) முன்னனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரிபவர்கள் மட்டும்)

9. இவ்விண்ணப்பம் கோரலின்போது அல்லது அதன் பின்னர், ஆட்சேர்ப்பை தாமதப்படுத்த அல்லது மாற்றங்களை மேற்கொள்ள அல்லது இரத்துச் செய்ய தம்புள்ள மாநகர சபையின் ஆணையாளருக்கு அதிகாரமுள்ளது. தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பின்போது வசனங்களில் அர்த்த வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியே முதலாகக் கொள்ளப்படும்.

அமில நவரத்ன,
மாநகர ஆணையாளர்,
தம்புள்ள மாநகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண, மாகாண அரச சேவையில் தம்புள்ள மாநகர சபையின்**
**......................... பதவிக்கு ஆட்சேர்ப்பு**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
2. (அ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஆ) நிரந்தர வதிவிட முகவரி :----.
3. ஆண்/பெண் :----.
4. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
(ஆ) விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. குடியியல் நிலைமை :----.
7. நீங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா அல்லது பதிவின் மூலமா? :----.
8. நீங்கள் எப்போதாவது சந்தேகத்தின் பேரிலோ அல்லது நீதிமன்றின் மூலமோ குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளீரா? ஆம் எனில் விபரம் தருக :----.
9. கல்வித் தகைமைகள் :----.
(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சையின் சுட்டெண் :----.
(இ) தோற்றிய வருடம் :----.
(ஈ) தோற்றிய பாடங்கள் :

| | | | |
|---|---|---|---|
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |
| -------- | ----- | -------- | ----- |

10. தொழில் தகைமைகள் மற்றும் முன்னனுபவம் :----.
11. நீங்கள் தற்போது தம்புள்ள மாநகர சபையில் சேவை செய்பவர்களாயின், அச்சேவைக் காலம் மற்றும் தொழிலின் தன்மை பற்றிய விபரங்கள் :- (நிரந்தரம்/தற்காலிகம்/கூலி அடிப்படையில்/ஒப்பந்த) :----.
12. வேறு தகைமைகள் :----.

இவ்விண்ணப்பப்பத்தில் என்னால் தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கெட்டியவரை உண்மையானதாகும். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் முன்னர் இத்தகவல்களிலேதும் தவறுகள் இருப்பது தெரியவந்தால், இப்பதவிக்கு தகுதியற்றவனாவேனென்றும், இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இத்தகவல்களிலேதும் தவறுகள் இருப்பது தெரியவந்தால், இப்பதவியிலிருந்து எவ்விதக் கொடுப்பனவுகளுமின்றி உடனடியாக நீக்கப்படுவேனென்றும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9-642

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்

*1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் குறிப்பிட்ட இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2015 ஆம் ஆண்டின் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்துமூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

க. துரைசிங்கம்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் கிழக்கு,
புத்தூர்,
2014, யூலை 30.

**அட்டவணை**

| விண்ணபப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற இடம் |
|---|---|---|---|
| சிவப்பிரகாசம் சிவரூபன்<br>புலோலி<br>தெற்கு புலோலி | செயலாளர் | றோயல் பொழுதுபோக்குக் கழகம் | சுன்னாகம் றோட், புத்தூர் |

9-632

**கேகாலை நகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கம் கொண்ட களியாட்ட விடுதிக்கான உரிமம் அளித்தல் சட்டம்*

*இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பெயர் குறிப்பிட்டுள்ளவரது பெயருக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள களியாட்ட விடுதியை அந்த இடத்தில் நடாத்திச் செல்வதற்கு 2015 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான உரிமம் அளித்தல் சட்டம் 6 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இக்களியாட்ட விடுதிக்கண்மையிலோ, களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கண்மையிலோ வதியும் ஒருவரால் அந்தக் களியாட்ட விடுதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் தமது ஆட்சேபனைக்கான காரணத்தை எழுத்துமூலம் அறிவிப்பதோடு அதனை இரு பிரதிகளுடன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

ஜீ. கே. சமரசிங்ஹ
தவிசாளர்,
கேகாலை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கேகாலை,
2014, ஓகத்து 27.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களியாட்ட விடுதியின் தவிசாளர்/ செயலாளர் | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதியின் புதிய நடவடிக்கைகளுக்கான இடம் |
|---|---|---|---|
| விதான ஹேனயலாகே சிரில், 167/28, ஒலகம, கேகாலை | தவிசாளர் | பளூலைட் ட்ரேடர்ஸ் அன்ட் ரெஸ்டுரண்ட் | இல. 152, கலுகல்ல மாவத்தை, கேகாலை |

9-641